**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 133/2018 .** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : பிரவீன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.12.2023

---

**முதல் விசாரணை:**

நான் பெரியசெம்மேட்டுபட்டியில் குடியிருந்து வருகிறேன், எனக்கு சாட்சி அ.சா 3 எனது அப்பா ஆகும், சாட்சி ராமர் எனது அப்பாவிற்கு பழக்கமானவர், 20.08.2016 ம் தேதி இரவு 7.00 மணியளவில் SOR ஹோண்டா ஷோ ரூம் அருகே நான் இருந்தபோது என்னுடன் அ.சா 3, சாட்சி ராமர் அ.சா 2 ம் இருந்தார்கள். மகேந்திரன் மேற்கிலிருந்து கிழக்காக ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் உசிலம்பட்டி - மதுரை ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்காக வந்த அரசு பேருந்து முன்னால் சென்ற லாரியை ஓவர் டேக் செய்யும் போது வலது புறம் ஏறி வந்து இருசக்கரவாகனத்தில் மோதியதில் அவர் அடிபட்டு இறந்துவிட்டார்.சாட்சி ராமர், எனது அப்பாவும் மகேந்திரனின் மகளுக்கு தகவல் சொன்னார்கள். அவரை ஆம்புலன்ஸ்சில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் நான் உடன் சென்றேன். பேருந்து சம்பவ இடத்தில் இருந்தது நான் ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். ஆஜர் எதிரி தான் அன்றை தினத்தில் பேருந்து ஓட்டியவர், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

சம்பவ நடைபெற்ற சமயம் சுமார் இரவு 7.00 மணி இருக்கும் , தேனி - மதுரை ஒரு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். டம் என்ற சத்தம் கேட்ட போது நான் விபத்து நடைபெற்ற இடத்தை பார்த்தேன். விபத்து சமயத்தில் அவருக்கு பேருந்து வருவதை கவனிக்காமல் சாலையை திடீரென குறுக்கே கடந்ததால் தான் தவிர்க்க இயலாதபடி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

S.d./Praveen

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.